தேசிய பொலிஸ் கல்விக் கல்லூரி - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பொலிஸ் கல்விக் கல்லூரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய் வாண்டின் மே முதல் நவம்பர் வரை	சொத்துக்கள் பயன்படுத்தா மையினால் 2024 ஆம் ஆண்டின் போது இந்த சொத்துக்கள் பெறுமானத்	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின்

	கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 7,985,912 ஆன பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சொத்துக்களுக்குரிய ரூபா. 271,635 பெறுமானத் தேய்வு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.	தேய்வு செய்யப்படவில்லை.	பிரகாரம் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இற்க முரணாக நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி மானியமாக கிடைக்கப்பெற்ற தொகையில் நிலையான சொத்துக்களாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 59,471,562 பிற்போடப்பட்டிருந்தது.	திறைசேரி மானியமாக கிடைக்கப்பெற்ற தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் எதிர்வரும் காலப்பகுதிக்காக பயன்படுத்தப்படும்.	சகல வருமானங்களும் கணக்கீடு செய்யப் படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் தனியாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா. 1,607,589 தொகைக்கு கொள்வனவு செய்யப் பட்ட கணனி மென்பொருள் கற்பனைச் சொத்தாக இனங்காணப் படாமல் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது.	மீளாய்வாண்டில் ரூபா. 1,607,589 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கல்வி முகாமைத்துவ முறைமை (Learning Management System) தவறுதலாக நிதிக்கூற்றுக் களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணரங்களின் கீழ் காண்பிக்கப்பட்டதுடன் அதில் பின்னர் அதனை சரி செய்து கற்பனைச் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் பழுதுபார்த்தல், வாகனப் பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா. 6,311,245 மூலதன தன்மையான செலவினம் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	சொத்துக்களின் உரித்து தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்கு உரித்தல் லாதிருந்தமையால் அதற்குரிய தாக மேற்கொள்ளப்பட்ட கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல்கள் மூலதன மாக்கப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்களின் உரித்து தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் உரித்தை நிறுவனத்திற்கு கையேற்று அவற்றையும் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் நிர்மாண செயற் திட்டங்கள் 08 இற்குரிய ரூபா. 1,642,972 நிறுத்திவைத்தல் பணம், நிறுத்திவைத்தல் கணக்கில் கணக்கீடு செய்வதற்கு பதிலாக பொது வைப்புக் கணக்கில் காண்பிக்க்பபட்டிருந்தது.	நிறுவனத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற் திட்டங்களுக்குரிய நிறுத்தி வைத்தல் பணம், நிறுத்தி வைத்தல் கணக்கில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுத்தி வைத்தல்கள் உரிய கணக்குகளில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	ஜேசீபீ இயந்திரம் பழுதுபார்ப்ப தற்காக செலவிடப்பட்ட ரூபா. 477,800 தொகை நிதிக் கூற்றுக்களல் இலத்திரனியல் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஜேசீபீ இயந்திரம் பழுதுபார்ப்ப தற்கு செலவான தொகை இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான செலவினங்கள் வாகனப் பழுதுபார்த்தலின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகளில் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேணடிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	நிதிப் பிரமாணம் 1646	வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதி ஒவ்வொரு மாதம் முடிவடைந்ததும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க	வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக் கள் மற்றும் மாதாந்த பொழிப்பின் பிரதி ஒவ்வொரு மாதம் முடிவ டைந்தவுடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு	நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

		வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	2016 திசம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை			
(i)	3.1 ஆம் பிரிவு	சகல எரிபொருள் பரிசோதனைகளின் பின்னர் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது கிலோ மீற்றர் 25,000 ஓடியதன் பின்னர் அல்லது வாகனத்தின் எஞ்ஜின் தொடர்பான பிரதான பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்பட்ட பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் 40 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது கிலோ மீற்றர் 25,000 ஓடியதன் பின்னர் அல்லது வாகனத்தின் எஞ்ஜின் தொடர்பாக பிரதான பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்பட்ட பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	4.1, 4.2, 4.3, 4.4 ஆம் பிரிவுகள்	வாகனத்தின் உள்ளக பழுதுபார்த்தல்களின் போது பொருத்தமான கராஜிக்கு எடுத்துச் சென்று கழற்றி கூறுவிலைகள் பெற்று அந்த விலைகளில் நியாயத் தன்மை தொடர்பாக அரசாங்கத் துறையின் இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கையைப் பெற்றுக் கொண்ட பின்னர் பழுதுபார்த்தல் மேற்கொள் ளவேண்டியிருந்த போதிலும் இலக்கம் 252-6258 என்ற டபிள்	நிறுவனத்தில் காணப்ப டுகின்ற சேவை தேவையின் பிரகாரம் வாகனங்கள் தாமதமின்றி பழுதுபார்ப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் காரணமாகவும், பொலிஸ் போக்குவரத்து பிரிவில் வாகன உதிரிப்பாகங்கள் காணப்படாதிருந்த சந்தர்ப்பங்களின் போதும் அந்த பிரிவின் பரிந்துரையின் அடிப்படையில்	2016 திசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 4.1, 4.2, 4.3, 4.4 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		கெப் வண்டியின் எஞ்ஜின் முழுமையாக பழுதுபார்ப் பதற்காக கூறுவிலை கோருவதன் மூலம் பழுதுபார்த்தல் மேற்கொண்டு ரூபா. 1,366,750 தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப் பட்டிருந்தது.	பெறுகை நடவடிக்கைகள் மற்றும் உரிய சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை யின் அடிப்படையில் பதிவு செய்த தனியார் கராஜிற்கு வாகனத்தை அனுப்பி பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் 2024.10.27 ஆம் திகதிய தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட் டுக் குழுவின் மூலம் பெறப்பட்ட தொழில் நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் படி இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது என கணக்காய்விற்கு அறியத் தருகின்றோம்.	
(இ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பந்தி	தேசிய ரீதியில் போட்டி யாளர் கேள்வி கோராமல், வாகனத் தரிப்பிடம் பழுதுபார்த்தல், மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் மற்றும் உடைந்த பொருட் களஞ்சியத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா. 8,267,287 செலுத்தப்பட்டி ருந்தது. இதனால் நிறுவனத்திற்கு போட்டியாளர் கேள்வி சமர்ப்பிப்பதன் அடிப்படையில் பெற முடியுமாக இருந்த விலை நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிடைத்திருக்க	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடத்தைப் பழுதுபார்த்தல், மோட்டார் சைக்கிள் தரிப்பிடம், பழுதுபார்த்தல் மற்றும் உடைந்த பொருள் களஞ்சியத்தைப் பழுது பார்த்தல் போன்ற 03 செயற்திட்டங்களும் ஒன்றுக்கொன்று வேறு பட்ட பணிகளாக இருந்தமையால் ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவு ம் தனித்தனியாக பெறுகைப் படிகள் மேற் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இந்த	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வில்லை.	செயற்திட்டத்திற்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் உரிய செலவின விடயத்திற்கு நிதி ஏற்பாடு மாற்றுதல் 2024 ஆம் ஆண்டின் இறுதியின் போது மாற்றப்பட்டமையால் போட்டியாளர் கேள்வி கோரும் முறைமை பின்பற்றி பெறுகை நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான காலம் போதியளவில் இல்லாதிருந்ததுடன் சந்தைவிலை ஒப்பீட்டு முறையின் கீழ் கேள்வி கோரி திணைக்களப் பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் கீழ் இந்த செயற்திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறியத் தருகின்றோம்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 19,495,988 மிகையாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனம் 2011 ஆம் ஆண்டின் சட்டம் அங்கீகரித்து அதன் 05 ஆவது பிரிவின் பிரகாரம் பொலிஸ் பணிகள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்து வதற்கு நேரடியாக உரித்தான விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கல்விசார் விடயங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்த போதிலும் கடந்த 12 வருட காலத்தில் இந்தப் பணிகள் அமுல்படுத்தப்பட்டி ருக்கவில்லை.	2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவன சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் பொலிஸ் பணிகள் மற்றும் சட்டதை அமுல்படுத்துவதற்கு நேரடியாக உரித்தான விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இதுவரையும் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட	2011 தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவன சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பதவியணியினரை சேர்க்க முடியாதிருந்தமையால் ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான பதவியணியினர் நிறுவனத்திடம் காணப்படாமை யினால் இந்தப் பணிகள் இதுவரை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என அறியத் தருகின்றோம்.	
(ஆ)	சட்டத்தின் 6(2) பிரிவின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட கல்விசார் பாடநெறிக்காக உள்ளடக்கப்படுகின்ற மாணவ உத்தியோகத்தர்களின் செயற் திறன் மதிப்பீட்டின் செயலாற் றலுக்காக பரீட்சைகள் நடாத்துதல், கல்விசார் பாட நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் போது மாணவர்களுக்கு சான்றிதழ் விநியோகித்தல் மற்றும் என்பீஏ (தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம்) என்ற தலைப்பில் பெயர் கையளித்தல், பொலிஸ் அதிகாரத் தரப்பினரின் அங்கீகாரத்தின் கீழ் பொலிஸ் பணிகள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய விடயங்கள் தொடர்பான டிப்ளோமா, சான்றிதழ், மற்றும் ஏனைய கலைசார் தகைமைகளை கையளித்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்தின் கீழ் அந்தப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்தல், நிறுவனத்தின் இலக்குகளை இலகுவாக்குவதற்காக நாளிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பிரசுரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல், நிறுவனத்தின் பணிகளுக்காக நூலகம், ஆய்வுகூடம் மற்றும் ஏனைய கட்டிடங்களை நிர்மாணித்தல், அவற்றுக்கு உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல், நிறுவனம் செயற்திறனாக செயற்படுவதற்காக தேவையான விரிவுரையாளர் பதவிகள் மற்றும் ஏனைய பதவிகளை ஏற்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின்	6(2)(இ) தெரிவு செய்யப்பட்ட கல்விசார் பாடநெறிக்காக உள்ளடக்கப்படுகின்ற மாணவர்களை செயற்திறனாக மதிப்பிடும் பணிகளுக்காக பரீட்சைகளை நடாத்துதல், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் கல்வி முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய திட்டமுறைமையொன்று மேற் கொள்ளப்படுகின்றது. 6(2) (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சட்டத்தின் 6(2) (இ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நடவடிக்கைகளை நிருவாகம் செய்வதற்காக தேவையான ஊழியர்களை நியமித்தல் மற்றும் பிரதிநிதிகளை நியமித்தல் போன்ற அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு 12 வருட காலம் கடந்திருந்த போதிலும் அதிகாரங்கள் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		
(இ)	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் 2011 நவம்பர் 21 ஆம் திகதி, 2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவன சட்டம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அங்கீகாரிக்கப்பட்டதுடன் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன் (2) (1) உப பிரிவின் பிரகாரம் இந்த நிறுவனம் கூட்டிணைக்க வேண்டி யிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையும் இலங்கை பொலிஸின் 225 ஆவது செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஏற்பாடு கிடைத்து அமுல்படுத்தப் படுவதுடன் பொலிஸ் பயிற்சி நிறுவனம் தனியான நிறுவனம் ஒன்றாக அமுல்படுத்துவதற்கு 12 வருட காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது.	தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் 2011 இன் 44 ஆம் இலக்க தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட துடன் நிறுவனத்திற்காக தேவையான தகைமை பெற்ற பதவியணியினரை இனங்காணல், அந்த பதவி யணிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்தப் பதவியணிக்காக உரிய ஆட்சேர்ப்பு நடைமுறை களை தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டதுடன் இலங்கை பொலிஸில் தனியான சுயாதீன நிறுவனம் ஒன்றாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான பின்புலம் முன்னைய ஆண்டின் போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தனியாக வரவுசெலவுத் திட்ட நிதி ஏற்பாட்டை ஒதுக்கி தனியான நிறுவனம் ஒன்றாக அமுல்படுத்து வதற்கு 12 மாத காலம் எடுத்திருந்ததை அறியத் தருகின்றோம்.	தனிப்பட்ட நிறுவனம் ஒன்றாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் புதிய நிருவாக கட்டிடத்தின் கேட்போர் கூடத்திற்காக ரூபா. 6,547,992 செலவில் 2021 திசம்பர் 23 ஆம் திகதி மொழி மாற்ற முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும்	இந்த விடயத்தை புதிய நிருவாக கட்டிடத்தில் கேட்போர் கூடத்தில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்தவுடன் பொருத்தும் வரை அந்த விடத்தின் பாதுகாப்புக்காக	சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்த வேண்டி யிருந்ததுடன் அந்த சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது.	களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய நிருவாக கட்டிடத்தில் மாநாட்டு மண்டபத்தில் இடவசதிகள் காணப்படாமையின் காரணமாக கொடித்துவக்கு விரிவுரை மண்டபத்தில் இந்த முறையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்குரிய மொழி மாற்ற கொட்டகை நிர்மாணிப்பதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	விளைவற்று இருக்காமைக்கு கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

3.3 ஏனைய நிறுவனங்களின் வளங்களை பயன்படுத்துதல்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டிற்காக நிறுவனத்திற்கு தேவையான நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தனியான வரவு செலவுத்திட்ட அறிக்கை யொன்று தயாரித்து தனிப்பட்ட நிறுவனம் ஒன்றாக அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பொலிஸ் திணைக்களத்தின் 225 செலவினத் தலைப்பின் கீழ் நிறுவனத்திற்காக ரூபா. 846,721,983 செலவிடப்பட்டி ருந்தது.	தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனம் 2023 ஆம் ஆண்டு வரையும் இலங்கை பொலிஸின் கீழ் நடாத்திச் செல்லப்பட்ட நிறுவனமாக இருந்தமையால் 2024 ஆம் ஆண்டின் போது தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்தின் கடமைகளை மேற்கொள்கின்ற சகல உத்தியோகத்தர்களும் இலங்கை பொலிஸில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் களாக இருந்ததுடன் அவர்களுக்கு உரிய சகல சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல் இலங்கை பொலிஸின் செலவினத் தலைப்பின் கீழ் ஆகும். மேலும் 2024 ஆம் ஆண்டின் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்கு நியமிக்கப் பட்டுள்ள ஒட்டுமொத்த பயிற்சி பிரிவிற்கும் மற்றும் அதற்கு நியமிக்கப்பட்ட சேவை பயிற்சி அலகுகள் 14 இற்கும் உரிய 313 உத்தியோகத்தர்களுக்காக சகல சம்பளம் மற்றும் படிகள் அந்த பிரிவிற்குரிய சகல	தனிப்பட்ட நிறுவனம் ஒன்றாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களும் இலங்கை பொலிஸின் 225 செலவினத் தலைப்பின் கீழ் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனம் 2024 ஆம் ஆண்டிற்குரிய இலங்கை பொலிஸ் 225 செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 846,721,983 செலவிடப்பட்டிருந்தது என கணக்காய்விற்கு அறியத் தருகின்றோம்.	
(ஆ)	பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு சட்ட ரீதியான உரித்தொன்று காணப்படாத பொலிஸ் திணைக்களத்திற் குச் சொந்தமான கட்டிடத்தைப் பழுதுபார்ப்ப தற்காக மீளாய்வாண்டின் போது ரூபா. 31,869,566 செலவினம் செய்யப்பட்டி ருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தனிப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றில் ஒதுக்கப்பட்ட போதிலும் நிறுவனத்தின் சகல பணிகளும் இலங்கை பொலிஸிற்குரிய கட்டிடத்தைப் பயன்படுத்தி மேற்கொள் ளப்படுகின்றது. அதன் உரித்து இலங்கை பொலிஸிற்கு சொந்தமாக இருந்த பொதும் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்தின் பணிகளுக்காக இந்த நிறுவனம் பயன்படுத்தப்படுகின்ற மையால் மீளாய்வாண்டின் போதும் ரூபா 31,869,566 செலவினத்தில் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனம் செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்படுவதுடன் இந்த கட்டிடங்களின் சட்ட ரீதியான உரித்து தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்கு கையளிக்கும் இயலுமை தொடர்பாக கவனத்திற் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என கணக்காய்விற்கு அறியத்தருகின்றோம்.	காணியினதும் கட்டிடத்தினதும் உரித்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்தின் செயற்பாடு களுக்காக பொலிஸ் திணைக்களத்திற்குரிய 40 வாகனங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட் டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஓட்ட வாகன பராமரிப்பு செலவினமாக ரூபா. 6,409,908 தொகையும், வாகன பழுதுபார்த்தலுக் காக ரூபா. 14,933,543 தொகையும் செலவிடப்பட்டி ருந்த போதிலும் அந்த வாகனங்களின் உரித்து நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படவில்லை.	நிறுவனத்தின் சகல பணிகளுக்காகவும் தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குதல் இலங்கை பொலிஸிற்குரிய தேசிய பொலிஸிற்கு சொந்தமான தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்தப்படுகின்றது. அதன் உரித்து இலங்கை பொலிஸிற்கு சொந்தமாக இருந்த போதும் தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்தின் பணிகளுக்காக இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றமையால் மீளாய்வாண்டின் போது ரூபா. 6,409,908 வாகன பராமரிப்பு செலவினத்திற் காகவும் ரூபா. 14,933,543 செலவினம் வாகனப் பழுதுபார்த்தலுக்காகவும், தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவன செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப் படுவதுடன் இந்த வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்கு கையேற்கும் இயலுமை தொடர்பாக கவனத்திற் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்படுகின்றது எனவும் கணக்காய் விற்கு அறியத்தருகின்றோம்.	வாகனங்கள் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்காக 42 பதவி களையுடைய அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினர் 163 ஆக இருந்ததுடன் அதில் 05 பதவிகளுக்கான 42 பதவியினை மாத்திரம் ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மிகுதி பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் நடைமுறை மீளாய்வாண்டின் இறுதி வரையும் அங்கீகரிக்கப்பட்	தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்தின் பதவியணியினருக்காக 42 பதவிகளை உடைய 163 பேர்களையுடைய பதவியணி யினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. HM1-1,	ஆட்சேர்த்தல் நடைமுறையினை அங்கீகரித்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	டிருக்கவில்லை. இதனால் பொலிஸ் திணைக்களத்தின் 246 உத்தியோகத்தர்கள் பொலிஸ் பயிற்சி நிறுவனத் திற்கு நியமித்து சேவையாற் றுகின்றனர்.	AR 2, AR 1, MM1-1, JM1-1, MA 5-1, MA 1-1. MA 1-2, PL 2 மற்றும் PL 3 என்ற பதவிகளுக் கான ஆட்சேர்ப்பு நடைமுறை (SOR) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா. 9,756,837 பெறுமதியுடைய புதிய நிருவாக கட்டிடத்தின் கேட்போர்கூடம், மாநாட்டு மண்டபம், வரவேற்பு பிரிவு, வகுப்பறை மற்றும் அலுவலக அறைகளை உள்ளடக்கி கைப்பெற்றிக் கொள்ளுதல் மீளாய்வாண் டின் போதும் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.	மேலதிக மூலதன நிதி ஏற்பாடு ரூபா 100 மில்லியன் ஒதுக்குதல் 2024 ஒக்டோபர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட் டிருந்தது. எனினும் இந்த ரூபா 100 மில்லியன் செலவினத்தை செய்வதற்கு திட்டமிடப்பட்ட சில செயற்திட்டங்களுக் காக போதியளவான பெறுகைக் காலம் காணப்படாமை, தொழில்நுட்ப அறிக்கை நிராகரிக்கப்பட்மை மற்றும் காலப்பகுதியின் போது பொருட்கள் வழங்குவதற்கு முடியாதிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக அந்த பெறுகைகளை மேற்கொள் வதற்கு முடியாதிருந்தது. மேலும் தற்போது தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்காக புதிய நிருவாகக் கட்டிடத்தில் கேப்போர்கூடம், மாநாட்டு மண்டபம், வரவேற்புப் பிரிவு, வகுப்பறை அலுவலக அறைகளை நடாத்திச் செல்வதற்காக தேவையான சகல வசதிகளும் தயார் செய்யப்பட் டுள்ளது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா. 31,869,566 செலவினம் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்காக தேசிய பொலிஸ் பயிறிசி நிறுவனத்திற்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செலனத் தலைப்பின் கீழ் மூலதன செலவினத்திற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் போது நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மீண்டெழும் செலவினங் களில் இருந்து ரூபா 100 மில்லியன் மீண்டும் மூலதன செலவினத்திற்காக மாற்றப்பட்டிருந்தது. இந்த மேலதிக மூலதன நிதி ஏற்பாடு ரூபா 100 மில்லியன் ஒதுக்கிக் கொள்ளல் அங்கீகரித்துக் கொள்வதற்கு 2024 ஒக்டோபர் மாதத்தின் போதே முடியுமாக இருந்தது. எனினும் இந்த ரூபா 100 மில்லியன் செலவினத்தை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த சில செயற்திட்டங்களுக்காக போதியள வான பெறுகைக் காலம் காணப்படாதி ருந்ததன் காரணமாக அந்தப் பெறுகை களை மேற்கொள்ளாதிருப்பதற்கும், போதியளவான பெறுகைக் காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய இயலுமை காணப்பட்ட நிறுவனத்திற்கு அத்தியவசி யமாக காணப்பட்ட பெறுகைகளை அமுல்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்த மையாலும் 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மாற்றப்பட்டி ருந்தது.	ஆண்டில் மேற் கொள்ள வேண்டிய சகல பணிகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.